# கேள்வி அறிவித்தல்
# கட்டடங்கள் திணைக்களம்
# <u>கிழக்கு மாகாணம்</u>

01 நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் **(CIDA) கட்டடங்கள் நிர்மாணத்திற்கு** பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தையுடைய கேள்விதாரர்களிடமிருந்து **திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால்** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02 தகுதியுடைய கேள்விதாரர்கள் கிழக்கு மாகாண பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன், அவர்களது பதிவு முகவரி கிழக்கு மாகாணத்துக்குள் இருத்தல் வேண்டும்.

03 அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தினை **பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கல்லடி, மட்டக்களப்பில்** செலுத்தி, பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை **நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கல்லடி, மட்டக்களப்பில்** சமர்ப்பிக்குமிடத்து 26**.07.2016 பிற்பகல் 03.00** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

04 பெறுகைமுறையானது திறந்த போட்டி விலைக்கேள்வி, ஒருகட்ட ஒருகடிதவுறை முறைமையாகும்.

05 கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஆவணங்கள் இரு பிரதிகளில் மட்டுமே விநியோகிக்கப்படும். தகுதியான கேள்விதாரர்கள் கேள்வி பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை **நிறைவேற்று எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், கல்லடி, மட்டக்களப்பில்** பெற்றுக்கொள்ளலாம். **(தொலைபேசி இல: 065-2222910)**

06 கீழே தரப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப் பிணைகள் **பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், உட்துறைமுக வீதி, கிழக்கு மாகாணம்** என எழுதப்பட்டு கேள்விகளுடன் இணைக்கப்பட்டு **தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, கட்டடங்கள் திணைக்களம் , உட்துறைமுகவீதி, கிழக்கு மாகாணம், திருகோணமலை** என்ற முகவரிக்கு **27.07.2016 பிற்பகல் 02.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் **கட்டடங்கள் திணைக்களம் , உட்துறைமுகவீதி, கிழக்கு மாகாணம், திருகோணமலை** என்ற முகவரியில் உடனடியாகத் திறக்கப்படும்.

07 முன் கேள்விக் கூட்டம் 20.07.2016 மு.ப 10.00 மணிக்கு **பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கல்லடி, மட்டக்களப்பில்** இடம்பெறும்.

08 பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

<u>அட்டவணை</u>

| வேலைகளின் விபரம் | CIDA தரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில்) | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை (ரூபா) | காலம் |
| மட்டக்களப்பு மாவட்ட காத்தான்குடி தள வைத்தியசாலையின் 2ஆம் மாடி வெளி நோயாளர் கட்டடக் கூரை சீர்படுத்தலும் (Improvement) இரத்த வங்கி விரிவாக்கமும் | C7 | 5,880,452.94 | 03 மாதங்கள் | 3,000.00 | 77 நாட்கள் | 59,000.00 | 105 நாட்கள் |

09. இச்சேவையினை எதிர்பார்க்கப்படும் தரத்திலும், வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள்ளும் பூர்த்திசெய்வதற்குரிய இயலுமையினை நிரூபிப்பதற்கு கேள்விதாரர்கள் பின்வரும் முற்தகமையினை கொண்டிருத்தல் வேண்டும்.

| **தேவைப்பாடுகள்** | **விபரங்கள்** |
|---|---|
| **சராசரி வருடாந்த வருமானம்** | தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் குறைந்தது ரூபா 06 மில்லியன் பெறுமதி கொண்ட சராசரி வருடாந்த வருமானம் கொண்டிருத்தல் வேண்டும்.<br>**இறுதி 3 வருட கணக்காய்வுக்குட்பட்ட நிதி அறிக்கையினை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.** |
| **சமமான வேலைகள்** | தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் குறைந்தது ரூபா 06 மில்லியன் பெறுமதி கொண்ட ஏதேனும் ஒரு சமமான வேலையினை இறுதி 3 வருடத்தினுள் முடிவுறுத்தியிருத்தல் வேண்டும்.<br>**(முடிவுறுத்தல் அறிக்கை கட்டாயமாக இணைத்தல் வேண்டும்.)** |
| **நிதி இயலளவு** | தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் ஆகக் குறைந்தது ரூபா 03 மில்லியன் கடன் வசதியினை ஏதாவது வங்கியிலிருந்தோ அல்லது திரவ பணமாகவோ கொண்டிருத்தல் வேண்டும்.<br>**(நிரூபிப்பதற்கான ஆதாரத்தினை கட்டாயமாக இணைத்தல் வேண்டும்.)** |

**மாகாணப்பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**
**தொலைபேசி இல: 026-2222630**
**திகதி:12.07.2016**

**எந்திரி.க.சந்திரமோகன்**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு.**